

பெரம்பூர் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வெற்றி வேட்பாளர் ஆர்.டி. சேகர் 46(அ) வட்டத்தில் கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் வாக்கு சேகரித்தார்.

## திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில்

# அ.தி.மு.க.வினர் 1000க்கும் மேற்பட்டோர் விலகல்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ,வ,வேலு முன்னிலையில் தி,மு,க,வில் இணைந்தனர்!

திருவண்ணாமலை, ஏப்.18-

திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட அ.தி.மு.க.வினர் அக்கட்சியிலிருந்து விலகி, பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

16.04.2026 வியாழக்கிழமை காலை 12.00 மணிக்கு திருவண்ணாமலை, திருக்கோயிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், திருவண்ணாமலை தொகுதியைச் சேர்ந்த 1000க்கும் மேற்பட்ட அ.தி.மு.க.வினர் அக்கட்சியிலிருந்து விலகி தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது.

கீழ் அணைக்கரை, சாவல்பூண்டி, நல்லவன் பாளையம், கோரிமேட்டுத் தெரு, அண்ணா நகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வழக்கறிஞர் பிரிவு நகர செயலாளர் எம்.எஸ்.எம்.சல்மான் தலைமையில், மாணவர் அணி எம்.எஸ்.எம்.அஜிஸ், முகமது சேட்டு, எம்.எஸ்.சாதிக், ஆட்டோ சங்கத் தலைவர் எம்.எஸ்.பாபு, எம்.எஸ்.சான், இளைஞர் அணி எம்.எஸ்.ஷாருக், கே.எம்.கரீம், எம்.எஸ்.சுல்தான் முன்னா, மஜீத், சையத் இலியாஸ், அலவுதீன், சௌந்தர், அமானுல்லா, அப்பாஸ், ஷபீர், அஸ்கர், இப்ரான், சாதிக், முன்னா, விஜய், எம்.தாஜ்தீன், எஸ்.ஷமீரா, எம்.ஆலியா, ஏ.அப்துல்ரகுமான், எஸ்.காதர், ஆர்.அமீர், ஐ.சரிதா, ஏ.திவ்யா, வி.அன்வர், எஸ்.பாத்திமா, எஸ்.கமால், ஏ.ரிகானா, ஒய்.இலியாத், ஆர்.பாசில், வி.நூரர், ஷபியா, தாவூத், ஆரீஸ், எம்.ஆர்.தாரிக், டி.இத்ரீஸ், எஸ்.சுமதி, கவின், கே.ஜீவன், எம்.இலட்சுமி, எஸ்.யாழினி, எம்.எஸ்.மீரா, தமிழ் செல்வி, வெண்ணிலா, வீரா, அருள், செந்தில், வி.சத்யா உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அக்கட்சியிலிருந்து விலகி, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

தி.மு.க.வில் இணைந்த அனைவருக்கும் பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு கைத்தறி ஆடை அணிவித்து வரவேற்றார்.

கழகத்தில் இணையும் நிகழ்ச்சியினை பகுதி செயலாளர் பா.ஷெரீப், முன்னாள் நகரமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம்.மாலிக் ஆகியோர் செய்திருந்தனர்.

நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், மாவட்ட துணை செயலாளர் பிரியா விஜயரங்கன், மாநில அமைப்புசாரா தொ.மு.ச. ஏ.ஏ.ஆறுமுகம், பீரங்கி.வெங்கடேசன், முன்னாள் ஊராட்சி தலைவர் ஏ.முத்துகுமார், அன்வர்பாஷா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வஞ்சகன் மோடியடா!

# சம்பந்தி வழக்கை முடிக்க சேராத இடம் சேர்ந்த எடப்பாடி!

## திண்டுக்கல்லில் ‘கர்ணன்’ படப் பாடல் பாடி இரா.முத்தரசன் தேர்தல் பிரச்சாரம்!



திண்டுக்கல், ஏப். 18 -

சம்பந்தி வழக்கை முடிப்பதற்காக சேராத இடம் சேர்ந்து வஞ்சத்தில் வீழ்ந்தாயடா, வஞ்சகன் மோடியடா என்று கர்ணன் படத்தில் வரும் பாடலை மெட்டு கட்டி பாடி வாக்கு சேகரித்தார் சி.பி.ஐ. கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான முத்தரசன். அதுபற்றிய விவரம் வருமாறு.

புதனன்று திண்டுக்கல் நகரில் தி.மு.க. வேட்பாளர் ஐ.பி. செந்தில்குமாருக்கு வாக்கு சேகரித்து பேசும் போது இவ்வாறு பேசினார். மேலும் அவர் பேசுகையில்,

இது என்ன நாடாளுமன்றத் தேர்தலா இது சட்டமன்றத் தேர்தலா என்று கேட்கிறார்.

இது சட்டமன்ற தேர்தல் தான் இந்த சட்டமன்றத் தேர்தலில் மூலமாக

தமிழ்நாட்டுக்குள் நுழைய முடியாத ஒரு கட்சி ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இல்லாத கட்சி. பாசிச கொள்கையை நம்பக்கூடிய கட்சி . அ.தி.மு.க. தோள் மீது ஏறிக்கொண்டு வருவதை அனுமதிக்கலாமா என்பது தான் கேள்வி.

பாரதிய ஜனதா கட்சியை பற்றி நாம் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும்.

பெயருக்குத்தான் பாஜகவே தவிர. அது முழுக்க முழுக்க ஆர்.எஸ்.எஸ். கொள்கைகளை பின்பற்றக் கூடிய அமுல்படுத்தக் கூடிய கட்சி . தமிழ்நாட்டில் வருகின்ற 23ஆம் தேதி தேர்தல் நடக்க இருக்கிறது மேற்கு வங்கத்தில் 23ஆம் தேதியும் 29 ஆம் தேதியும் இரண்டு கட்டமாக தேர்தல் நடைபெற இருக்கிறது. இத்தகைய சூழ்நிலையில் நாடாளுமன்ற சிறப்பு கூட்டம் நடத்தப்படுகின்றனர். இது நியாயம்தானா? இது தான் ஜனநாயகமா ? தமிழ்நாட்டில் உள்ள 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் பரப்புரையில் இருக்கிறார்கள். அதேபோல் மேற்கு வங்கத்தில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் பரப்புரையில் இருக்கிறார்கள்

தமிழக முதல்வரின் அறிக்கை அனைத்து நாளேடுகளிலும் வந்துள்ளது. நடுநிலையான பெரியவர்ககளை ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை உடையவர்களை தயவு செய்து முதலமைச்சரின் அறிக்கையை படித்து பாருங்கள் ஒரு முறைக்கு இருமுறை படித்துப் பாருங்கள்.

இந்த தொகுதிகள் அதிகரிப்பதின் மூலமாக தமிழ்நாடு உட்பட தென் மாநிலங்களை புறக்கணித்து வடமாநிலத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கையை அதிகரித்து நிரந்தரமாக இந்தியாவை பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சியை உருவாக்கி கொள்கின்ற தந்திர முயற்சியாக இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

அண்ணன் எடப்பாடி பழனிச்சாமி சிக்க கூடாத இடத்தில் சிக்கியுள்ளார்..

தெரிந்தோ தெரியாமலோ சிக்கிவிட்டார். . கர்ணன் திரைப்படத்தில் கண்ணதாசனின் பாடல்கள் வரும் செஞ்சோற்று கடன் தீர்க்க சேராத இடம் சேர்ந்து வஞ்சத்தில் வீழ்ந்தாயடா கர்ணா வஞ்சகன் கண்ணனடா. அந்தக் கண்ணதாசன் தற்போது இல்லை. அவர் இருந்திருந்தால் என்ன பாடுவார் தெரியுமா சம்பந்தியின் வழக்கை முடிக்க சேராத இடம் சேர்ந்து வஞ்சத்தில் வீழ்ந்தாயடா எடப்பாடி பழனிச்சாமி வஞ்சகன் மோடியடா என்று இன்று பாட்டு பாடி இருப்பார் அப்படி போய் வலையில் சிக்கிக் கொண்டார் சிலந்தி வலையில் சிக்கிக் கொண்ட ஈயை போல சிக்கி தவித்துக் கொண்டிருக்கிறார் . என்ற இரா. முத்தரசன் அவர்கள் செந்தில்குமாருக்கு உதய சூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார்.



சைதை மேற்கு பகுதி 142வது (அ) வட்டக் கழக செயலாளர் எஸ்.பி.கோதண்டம் அவர்களின் மூத்த சகோதரர், கழக முன்னோடி எஸ்.பி.எத்திராஜ் 13ம் நாள் நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு நிகழ்வு பகுதி கழக செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, எம்.சி, முன்னிலையில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் படத்தினை திறந்து வைத்து மலரஞ்சலி செலுத்தினார். துணைமேயர் மு.மகேஷ்குமார், பகுதி செயலாளர் இரா.துரைராஜ், எம்.சி, சைதை மா.அன்பரசன், களக்காடிஎல்லப்பன், டி.என்.சிவமணி, ஆர்.ரமேஷ், எம்.நாகா, சை.மு.சேகர், அட்கோகமலநாதன், ஆ.வரதன், பொன்ஜெய்சிங், ஆர்.எல்.காந்தன், பால்கார்ரவி, ஆர்.கிருஷ்ணகுமார், ஜிம்பிரபு ஆகியோர் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### த. சின்னச்சாமி

### ஏப்ரல் 18 (2005)



கழகம் தொடங்கிய போதே உறுப்பினராகி கழகப் பணியாற்றி, தலைமைச் செயற்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

மதுரை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் – மதுரை மாநகராட்சி துணை மேயராகவும் பொறுப்பேற்று சிறப்பாக பணியாற்றியவர்.

1965–ல் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பங்கு பெற்றதோடு, கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து



# மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் எம்.பி. தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

## தலைமைக் கழக அறிவிப்பு

| தேதி | மாவட்டம் | சட்டமன்ற தொகுதி |
|---|---|---|
| 19.4.2026 | திருப்பூர் வடக்கு | அவினாசி |
| | கோவை மாநகர் | கோவை தெற்கு |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 16-04-2026.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பழைய பல்லாவரம் ஜமீன் பல்லாவரம் குரோம்பேட்டை ஆகிய பகுதிகளில் மண்டல தலைவர் பகுதி கழகச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிவேட்பாளர் அனகை டி. முருகேசனை ஆதரித்து பல்லாவரம் இ. கருணாநிதி எம்.எல்.ஏ. வீதி வீதியாக திறந்த ஜீப்பில் சென்று முரசு சின்னத்திற்கு ஆதரவு திரட்டினார் பகுதி கழகச் செயலாளர் இ. எஸ். பெர்னார்ட் காங்கிரஸ் ஆர். எஸ் செந்தில்குமார் மதிமுக மாவை மகேந்திரன் மூ. ரஞ்சன் திமுக மற்றும் கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் ஏராளமானோர்கள் திரண்டு ஊர்வலமாக சென்று பிரச்சார மேற்கொண்டு முரசு சின்னத்திற்கு ஆதரவு திரட்டினார்கள்



பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் ஆர்.டி.சேகரை ஆதரித்து முல்லைநகர் பகுதியில் உதயசூரியன் சின்னத்தில் தொ.மு.ச. பேரவை இணைப் பொதுச் செயலாளர் ஜெ.விஜயகுமார் தலைமையில் மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கத் தலைமை நிலையச் செயலாளர் அ.தங்கராஜ் மற்றும் தலைமைச் சங்க நிர்வாகிகள், சங்க முன்னோடிகள் பெருந்திரலாக கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.எஸ். பாண்டியன்

### ஏப்ரல் 18 (2019)



மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

சட்டக் கல்லூரியில் பயிலும் போதே மாணவர் அணியிலும், பின்னர் வழக்கறிஞராக பதிவு செய்த பின்னர் மாவட்ட வழக்கறிஞர் அணியிலும் பணியாற்றினார்.

மதுரை மாநகர் மாவட்டம், காமராஜபுரம் பகுதிக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் அனைத்திலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**